**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.**

**முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A.,M.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி.**

2021ம் வருடம் பிப்ரவரி மாதம் 4 ம் நாள்

சார்வரி ஆண்டு தை மாதம் 22 ம் நாள் வியாழக்கிழமை

**I.A . No. 702/2020**
**in**
**O.S. No.100/2013**

கார்த்தி

..... மனுதாரர்/பிரதிவாதி

M. பாலமுருகன்

.... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 15.12.2020ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K. சந்தனக்கருப்புச்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் திரு.G.M. ரமணி அவர்கள் ஆஜராகியும், கடந்த 27.01.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இந்த நிர் மனுவும் அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பு கூடுதல் சான்றாவணங்களாக மனுவில் கண்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்வதற்கு காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து ஏற்றுக்கொள்ள கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி விதி 3(A) மற்றும் பிரிவு 151ன்படி, தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:**

மனுதார் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், அசல் வழக்கானது பிரதிவாதிகளை கட்டுப்படுத்தி தாவா சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கனாது தற்சமயம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக 08.12.2020ம் தேதியில் ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்து தொடர்பாக எதிர்மனுதாரரின் தந்தையும் அவரது சகோதரியும் கடந்த 18.10.1985ம் தேதியிட்டு ஏற்படுத்தி கொண்ட பதிவு செய்த பாகப்பிரிவினை பத்திர எண். 1224/1985 ஆவணத்தை பிரதிவாதி தரப்பு சான்றாணவமாக குறியிடு செய்ய வேண்டியது அவசியமானது என்றும், மேற்படி ஆவணமானது தாவா

சொத்து தொடர்பான பிரச்சனையை தீர்வு காண்பதற்கு அவசியமானது என்றும், மேற்படி ஆவணத்தை பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்வதற்கு மேற்படி ஆவணத்தை காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து ஏற்றுக்கொள்ள இம்மனு தாக்கல் செய்யப்பட்டதாக வாதுரைக்கப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிர் உரையின் சுருக்கம்:</u>**

மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் தவறானவை என்பதோடு, சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றும், அசல் வழக்கானது தாவா சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, வாதி தரப்பு சாட்சிய விசாரணை முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சிய விசாரணைக்காக உள்ள நிலையில், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தான பொது சந்தினை மனுதாரர்/பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டி வருவதால், தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா வழக்கு பகுதியாக விசாரணை செய்யப்பட்டுள்ள நிலையில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு ஏற்கத்தக்கதல்ல என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணத்தில் கண்ட சொத்திற்கும், தாவா சொத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணத்திற்குரிய அசல் ஆவணத்தை பற்றி மனுவில் குறிப்பிடவில்லை என்றும், வீண் காலதாமதம் மற்றும் வீண் அலைக்கழப்பு செய்யும் எண்ணத்துடன் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென எதிர்வாதம் செய்யப்பட்டது.

3) மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதை தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

**<u>தீர்வு:-</u>**

4) இரு தரப்பும் வாதுரை மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்யும்போது, அசல் வழக்கானது பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணமானது பதிவு செய்யப்பட்ட ஆவணமாக இருப்பதால், அதன் உண்மைத்தன்மை மற்றும் சாட்சியமாக ஏற்கும் தன்மை ஆகியவற்றை இருதரப்பு சாட்சிய சான்றாணவணங்களின் அடிப்படையில், வழக்கு விசாரணையின் இறுதியில் மட்டுமே தீர்வு காண இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

5) மேலும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதோ அல்லது குறியீடு செய்வதால் மட்டுமே நிரூபணம் ஆகாது என்பதும், வழக்கு தரப்பினர்கள் தாக்கல் செய்யும் ஆவணங்களை அதனை ஏற்கும் நிலையிலே தள்ளுபடி செய்யக்கூடாது என்பதும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் அடியிற்கண்ட வழக்கில் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1) "**<u>Sundram Dyna cast Pvt ltd (vs) Roas contmls case which was reported in 2011(2) LW 56(Mad)</u> <u>filing of document Rejection of:</u> M**ere filling of document would not bar responds from questioning admissibility of resolution hence admissibility or veracity of document cannot be gone into at inception stage. Therefore order of court rejecting filling of document unjustified."

2) <u>"Murugesan (vs) Arumugam case reported in 2017 (4) MLJ 594,</u> the Hon'ble High court of Madras held that, The evidence produce by a party cannot be shutdown at the threshold itself. The court has to decide the genuineness and relevancy of the document only after let in conclusion of the trail by appreciating the evidence by the parties. On such appreciation the court can either accept or reject the same and deliver the judgment."

6) மேற்கண்ட இருதரப்பு வாதுரைகள் மற்றும் பொருண்மைகள் மற்றும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடுகளின்படி இம்மனு அனுமதிக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் இம்மனு நடவடிக்கையினால் எதிர்தரப்பினருக்கு ஏற்பட்ட காலம் மற்றும் பொருளாதார இழப்பை நிவர்த்தி செய்யும் பொருட்டு மனுதாரர்/பிரதிவாதி எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.500/- செலுத்துவதின் பேரில் இம்மனு அனுமதிக்கத்தக்கது என தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்/பிரதிவாதியால் வழக்கு நடவடிக்கையில் எதிர்மனுதாரர்/வாதிக்கு ஏற்பட்டுள்ள கால இழப்பை ஈடுசெய்யும் பொருட்டு மனுதாரர்/பிரதிவாதி ரூ.500/- செலவு தொகையாக 11.02.2021க்குள் எதிர்மனுதாரர்/வாதிக்கு செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலும், மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் வழக்கின் பொருண்மைகளுக்கு ஏற்புடையதாக இருக்கும்பட்சத்தில் அனுமதிக்கக்கூடியது என்ற நிபந்தனையின் பேரிலும், அடுத்த கேட்பு நாளில் மனுதாரர்/பிரதிவாதி விசாரணை செய்யப்படவேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலும் இம்மனு அனுமதிக்கப்படுகின்றது. தவறும் பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்று உத்தரவிடப்படுகிறது.

செலவு தொகை செலுத்தப்பட்டதை பதிவு செய்வதற்கான கேட்பு நாள் 12.02.2021

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2021ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம்.D.ராம்கணேஷ்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//